# திருப்பூர் மாநகராட்சி

## 2019 செப்டம்பர் மாதம் 30-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

## எண். 694 முதல்708

## திருப்பூர் மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**694)** திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள மொத்தம் 153 பள்ளிகளில், 24 பள்ளிகளில் மராமத்து செய்ய வேண்டிய பணிகளுக்காக மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டதில் ரூ.78.55 இலட்சம் தேவையாக உள்ளது என தெரிவித்தும், மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து தொகை ஏற்கனவே செலவழிக்கப்பட்டு கையிருப்பில் கல்வி நிதி இல்லை என்ற விபரம் தெரிவித்தும், இப்பணிகள் மேற்கொள்ள ரூ.78.55 இலட்சம் சி.எஸ்.ஆர். ( CSR) நிதியிலிருந்து விடுவிக்க கோரி புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநருக்கு மாநகராட்சி கடிதம் ந.க.எண்.இ.1/4419/2019 நாள் 09.08-2019ல் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி பொது நிதியில் இருந்து பின்வரும் 7 பணிகள் ரூ.24.34 இலட்சத்தில் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண். 19 பூலுவப்பட்டி மாநகராட்சி பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.24 |
| 2. | வார்டு எண்.26 நெசவாளர் காலனி மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் கழிப்பறை பராமரிப்பு பணிகள் செய்தல் | 5.50 |
| 3. | வார்டு எண்.10 குமார் நகர் பகுதியில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் மின்சார வசதி செய்தல் | 2.50 |
| 4. | வார்டு எண்.56 பாரப்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுது சரி செய்தல் | 5.00 |
| 5. | வார்டு எண்.52 கருப்பகவுண்டன்பாளையம் ஆரம்பப் பள்ளியில் புதிதாக சுற்றுச் சுவர் மற்றும் பழுது சரி செய்தல், பராமரிப்பு பணிகள் செய்தல் | 4.30 |
| 6. | வார்டு எண்.55 சுண்டமேடு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.50 |
| 7. | வார்டு எண்.56, கே.வி.ஆர்.நகர் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.30 |
| | மொத்தம் | 24.34 |

இந்நிலையில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநரின் கடிதம் ந.க.எண். NTADCL / 06 /2019 / 056 நாள் 13-09-2019-ல் கடிதத்தில் 26-08-2019-ல் நடைபெற்ற குழு கூட்டத்தில் ரூ.21,96,234/- அவசர பராமரிப்பு செலவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதால் இத்தொகையினை அனுப்பி வைத்தும், மீதித் தொகை ரூ.48,66,382/-ஐ 2019-20ம் நிதியாண்டில் அனுப்பி வைக்கப்படும், எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற தொகைக்கு பயனீட்டு சான்றிதழ் அனுப்பி வைக்கவும் கோரப்பட்டுள்ளது. எனவே முதல் நிலையாக பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 7 பணிகளையும் சி.எஸ்.ஆர். நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாறுதல் செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் ரூ.48,66,382/- ஐ அனுப்பி வைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிதிக்கு பின்வருமாறு 17 பணிகளை ரூ.48.75 இலட்சத்தில் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**694-ன் தொடர்ச்சி**

| வ. எண். | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | 4 | வெங்கமேடு மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 4.00 |
| 2. | 12 | பாலமுருகன் நகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 3.75 |
| 3. | 14 | ரங்கநாதபுரம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 3.75 |
| 4. | 19 | நல்லாத்துப்பாளையம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.70 |
| 5. | 20 | நேரு நகர் மாநகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் போயம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.10 |
| 6. | 21,22 | தொட்டி மண்ணரை மாநகராட்சி நடுநிலைப் பள்ளி, பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 3.50 |
| 7. | 24 | வெங்கடாசலபதி தொடக்கப் பள்ளி மற்றும் சின்னசாமியம்மாள் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.30 |
| 8. | 27 | எம்.எஸ்.நகர் தொடக்கப் பள்ளி மற்றும் திருநீலகண்டபுரம் நடுநிலைப் பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 1.50 |
| 9. | 28,29, 30 | பாரதி நகர் நடுநிலைப் பள்ளி (கேத்தம்பாளையம், பிச்சம்பாளையம் தொடக்கப் பள்ளி கேத்தம்பாளையம் நடுநிலைப் பள்ளி மற்றும் கங்கா நகர் தொடக்கப் பள்ளி ஆகிய பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.50 |
| 10. | 32 | மண்ணரை மற்றும் போயர் காலனி நடுநிலைப் பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 1.05 |
| 11. | 34 | காஞ்சி நகர் நடுநிலைப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 3.60 |
| 12. | 36 | முத்தனம்பாளையம் தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 4.00 |
| 13. | 50 | வெள்ளியங்காடு மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.50 |
| 14. | 52 | கல்லாங்காடு மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 3.20 |
| 15. | 48 | காதர்பேட்டை மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 1.50 |
| 16. | 57 | முருகம்பாளையம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.50 |
| 17. | 59 | ஆண்டிபாளையம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 4.30 |
| | | மொத்தம் | 48.75 |

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் அனுமதி வழங்கலாம். கூடுதல் மதிப்பீட்டுத் தொகை பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி வழங்கலாம். (இ.1 / 4419 / 2019)

------

## தீர்மானம்:அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-----

**695)** திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் எண்-4, வீரபாண்டி கிராமம், க.ச.எண்கள்466/2-ல் அமைந்துள்ள 2.38 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்தேசித்து திருமதி.கே.சரஸ்வதி, க/பெ.குப்புசாமிகவுண்டர் என்பவர் விண்ணப்பித்து இருந்ததின் பேரில் உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டகுழுமம் அவர்களின் ந.க.எண்.2058/2018/தி.உ.தி.கு., நாள் 25-09-2018-ந் தேதிய கடிதத்தில், உத்தேச குடியிருப்பு

**695-ன் தொடர்ச்சி**

மனைப்பிரிவிற்கு சாலை அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டது.

உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள சாலை ஒப்படைப்பு வரைபடத்தின்படி குடிநீர் பிரதானக் குழாய், மழைநீர் வடிகால், சிறுபாலம், தார்சாலை ஆகியவை மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள தரத்தில் மனுதாரரால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தெருவிளக்கு கம்பங்கள் அமைக்க ரூ.3,20,000/-மாநகராட்சிக்கு செலுத்து சீட்டு எண்.032/501/5/19-20/00396, நாள் 21-05-2019-ல் செலுத்தப்பட்டு உள்ளது.

உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ஒப்புதலளித்துள்ள சாலை ஒப்படைப்பு வரைபடத்தின்படி, உத்தேச மனைப்பிரிவு சாலைகளை மாநகராட்சியின் பராமரிப்புக்கு தானமாக வழங்கிய தான சாசனப் பத்திரம் எண்.3200/2019 நாள் 25-07-2019ல் ஏற்றுக் கொண்டு, உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் வழங்கப்படும் இறுதி ஒப்புதலின்படி உத்தேச மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

உறுப்பினர் செயலர்,திருப்பூர் உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதலளித்துள்ள சாலை ஒப்படைப்பு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சாலைகளை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு தானமாக ஏற்றுக் கொண்டு, உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் வழங்கப்படும் இறுதி ஒப்புதலின்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ.1 / 2737/2018/ம.4)

-----

## தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.

--------

**696)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN 42 S 0437 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு 21.06.2019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர் Best Motor Works,<br>Naripallam Road. Odanthurai,<br>Mettupalayam- 641 301. | 1,60,500/- |
| 2. | திருவாளர் Mettupalayam Auto Service Center,<br>Raja Nagar, Poyampalayam, PN Road,<br>Tirupppur - 641 602. | 1,48,400/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர். Mettupalayam Auto Service Center, **Tiruppur** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**696-ன் தொடர்ச்சி**

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். Mettupalayam Auto Service Center, Tiruppur என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( H.1 / 1064 /2019 / ம.4)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-----

**697)**திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN 39 L 8273 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு 08.03.2019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர் Best Motor Works,<br>Naripallam Road. Odanthurai,<br>Mettupalayam- 641 301. | 1,00,900/- |
| 2. | திருவாளர் Mettupalayam Auto Service Center,<br>Raja Nagar, Poyampalayam, PN Road,<br>Tirupppur - 641 602. | 98,700/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர். Mettupalayam Auto Service Center, **Tiruppur** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். Mettupalayam Auto Service Center, Tiruppur என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( H.1 / 2908 /2019 / ம.4)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-----

**698)**திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN 42 CB 0093 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 08.03.2019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர் Mettupalayam Auto Service Center,<br>Raja Nagar, Poyampalayam Pirivu South,<br>PN Road, Tirupppur - 641 602. | 92,575/- |
| 2. | திருவாளர் Best Motor Works,<br>Naripallam Road. Odanthurai,<br>Mettupalayam- 641 301. | 93,860/- |

**698-ன் தொடர்ச்சி '**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர். Mettupalayam Auto Service Center, **Tiruppur** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். Mettupalayam Auto Service Center, Tiruppur என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( H.1 / 2909 /2019 / ம.4)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-----

**699)**அரசாணை (2) எண்.37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14-05-1999-ல், நகராட்சி/மாநகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு ஆண்டிற்கு ஒரு முறை இரண்டு ஜோடி பாலிஸ்டர் சீருடைகள் கீழ்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**1.ஆண்கள்:**

1. அரைக்கால் சட்டை .. 0.80 * 2 = 1.60 மீ
2. அரைக்கை சட்டை .. 1.75 * 2 = 3.50 மீ

**பெண்கள் :**

1. இரண்டு பாலிஸ்டர் புடவைகள் .. ஒவ்வொன்றுக்கும் 5.5 மீ
2. இரண்டு ரவிக்கைத் துணி .. ஒவ்வொன்றுக்கும் 0.90 * 2 = 1.80 மீ

2.ஆண், பெண் இருவருக்கும் ஆண்டிற்கு ஒரு முறை தலைப்பாகை துணி 2.00 மீட்டர் அளவில் வழங்கப்பட வேண்டும்.

3. தையற்கூலி ஆண்களுக்கு 1 ஜோடி சீருடைக்கு ரூ.100/- வீதம் ஆண்டிற்கு ரூ.200/-ம் பெண்களுக்கு ஒரு ரவிக்கைக்கு ரூ.20/- வீதம் ஆண்டிற்கு ரூ.40/-ம் வழங்கப்பட வேண்டும் என பார்வை 1ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டு அதன்படி நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டு வந்தது.

பார்வை 2ல் கண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி 110-ன் கீழ் 28-09-2015 அன்று கீழ்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணையில் ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை இரண்டு ஜோடி பாலிஸ்டர் சீருடைகள் கீழ்கண்ட அளவில் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அரைக்கால் சட்டை Half Part வழங்கப்பட்டு வருகிறது. அரைக்கால் சட்டைக்கு பதிலாக முழுக்கால் சட்டை Full Part வழங்கிட வேண்டும் என துப்புரவு பணியாளர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து துப்புரவு பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் இந்த ஆண்டு முதல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அரைக்கால் சட்டைக்கு பதிலாக முழுக்கால் சட்டை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 3ல் காணும் அரசாணை வெளியிடப்பட்டது.

**699-ன் தொடர்ச்சி**

மேற்படி அரசாணையில் ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை இரண்டு ஜோடி பாலிஸ்டர் சீருடைகள் கீழ்கண்ட அவில் வழங்கலாம் என தெவிக்கப்பட்டது.

1. ஆண்கள் சீருடை
   முழுக்கால் சட்டை = 1.30 மீ * 2 = 2.60மீ
2. தையற்கூலி ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜோடி சீருடைக்கு ரூ.400/- வீதம் இரண்டு ஜோடிக்கு ஆண்டிற்கு ரூ.800/- வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து வரும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு சென்ற ஆண்டு இம்மாநகராட்சியால் வழங்கப்பட்ட சீருடை ரவிக்கைக்கான தையற்கூலி 1க்கு ஆண்டொன்றுக்கு ரூ.20/- வீதம் 2 ஜோடிக்கு ரூ.40/- என இருந்ததை, ஒரு ரவிக்கைக்கு ரூ.40/- வீதம் என 2 ஜோடிக்கு ரூ.80/- என உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அதன்படியே 2019-2020 ஆம் ஆண்டுக்கும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 2 ஜோடி சீருடை ஜாக்கட்க்கு ரூ.80/- வழங்கலாம்.

இதன் அடிப்படையில் திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரம், பொது பிரிவு, பொறியர் பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் மண்டலங்களில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், காவலர், அலுவலக உதவியாளர், குடிநீர் பணியாளர், மகப்பேறு உதவியாளர், மகப்பேறு ஆயா, செவிலியர், பல்நோக்கு சுகாதார பணியாளர் மற்றும் மருத்துவ அலுவலர் ஆகியோருக்கு 2019-2020 ஆம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் சீருடைக்கான தையற்கூலி வழங்கப்பட வேண்டியுள்ளதால் ஆண் பணியாளர்களுக்கான மொத்த சீருடை மற்றும் சீருடைக்கான தையற்கூலி ரூ.17,03,012.60 (அ) 17,03,013/-க்கும் பெண் பணியாளர்களுக்கான மொத்த சீருடை மற்றும் சீருடைக்கான தையற்கூலி ரூ.4,20,510/-யும் சேர்த்து உத்தேச செலவினம் ரூ.22.00 லட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கு அனுமதி வழங்கலாம். ( எச்.1/3980 / 2019 )

-------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

-----

**700)** தேசிய பசுமை தீர்ப்பாயத்தால் உருவாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மைக்காக மாநில கண்காணிப்பு குழுவின் உத்திரவின்படி, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கான கொள்கைகள் ( Solid Waste Management Policy ) உருவாக்கப்பட்டு அதனை மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டுமென நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 2288 /P3/ 2019 நாள் 25-02-2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விவரப்படி Chapter - 1 முதல் Chapter - V வரையிலான திருப்பூர் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்ட கொள்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. ( நகல் இணைக்கப்பட்டுள்ளது.)

திடக்கழிவு மேலாண்மை திட்ட கொள்கையினை அவசர அவசியம் கருதி, திருப்பூர் மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.40,000/-க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**700-ன் தொடர்ச்சி**

**அலுவலகக் குறிப்பு** :

அ) அனுமதிக்கலாம்.

ஆ) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ரூ.40,000/-க்கு செலவீனம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( எச்.1 / 0941 / 2019)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**-----**

**701)** தமிழ்நாடு நகர்ப்புற சாலைகளை உள்கட்டமைப்பு திட்டம் 2019-20-ன் கீழ் நகராட்சி நிவாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.117349/2019/இ3, நாள் 03-09-2019-ல் 113பணிகளை ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் மாநகரில் பல்வேறு இடங்களில் சாலை பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு 9 சிப்பங்களாக மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வரிசை எண். | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 1 | வார்டு எண்.1-க்குட்பட்ட மாரப்பக்கவுண்டர் வீதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.1-க்குட்பட்ட திலகர் நகர் வீதி பகுதியில் முதல் வேலம்பாளையம் பள்ளி பின்புறம் வரை மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.1-க்குட்பட்ட திலகர் நகர் மேற்கு 2வது வீதி மற்றும் 3வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.2-க்குட்பட்ட ஆத்துப்பாளையம் முதல் வெங்கமேடு வரை தடுப்புச் சுவர், சிறுபாலம் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண். 4-க்குட்பட்ட வெங்கமேடு முதல் ஆத்துப்பாளையம் 2வது குறுக்கு வீதியில் தடுப்புச்சுவர், சிறுபாலம் மற்றும் மறுதார்தளம் அமைத்தல்,வார்டு எண். 4-க்குட்பட்ட அலமேலு நகர் வீதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் மறுதார்தளம் அமைத்தல்,வார்டு எண்.4-க்குட்பட்ட குப்பையன்காடு பகுதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.5-க்குட்பட்ட சௌபாக்யா நகர் குறுக்கு வீதி, கோகுலம் காலனி பிரதான சாலை மற்றும் குறுக்கு வீதிகளுக்கு மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் மறுதார்தளம் அமைத்தல்,வார்டு எண்.6-க்குட்பட்ட சிவானந்தர் வீதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.7-க்குட்பட்ட சக்தி தியேட்டர் ரோடு குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும்மறுதார்தளம் அமைத்தல்,வார்டு எண்-7-க்குட்பட்ட ஏ.வி.பி. லே-அவுட் கவுண்டர் மெஸ் வீதி முதல் ஏ.வி.பி. லே-அவுட் 3வது பிரதான குறுக்கு சாலை வரை மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் மறுதார்தளம் அமைத்தல்,வார்டுஎண்-16-க்குட்பட்டகருப்பராயன் கோவில் 2, 3, 4 குறுக்கு வீதி மற்றும் காசிவிநாயகர் கோவில் பிரதான சாலை ஆகிய பகுதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் புதிய தார்தளம் அமைத்தல்,வார்டு எண்-17-க்குட்பட்ட ஜே.பி.நகர் 2வது வீதி மற்றும் காமராஜ் நகர் பிரதான சாலை ஆகிய பகுதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் புதிய தார்தளம் அமைத்தல் | 5.45 | 499.40 |

| வரிசை எண். | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 2 | 2 | வார்டு எண்-3-க்குட்பட்ட பேரறிஞர் அண்ணா நெசவாளர் காலனி மற்றும் குறுக்கு வீதிகளில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் புதிய தார்தளம் அமைத்தல், வார்டு எண்-3-க்குட்பட்ட பிரியங்கா நகர் பகுதியில் தடுப்புச்சுவர் மற்றும்மறுதார்தளம் அமைத்தல்,வார்டு எண்-6 க்குட்பட்ட முத்து கோபால் நகர் 1வது மற்றும் 2வது குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் சாலைகளை புதுப்பித்தல்,வார்டு எண்-6-க்குட்பட்ட நடராஜா லே-அவுட் 3வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல்,வார்டு எண்-8.-க்குட்பட்ட குமரன் வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-8-க்குட்பட்ட குமரானந்தபுரம் கிழக்கு வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-8- க்குட்பட்ட கருப்பராயன் கோவில் வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-8-க்குட்பட்ட பாரதியார் வீதியில் தார்தளம் புதுப்பித்தல்,வார்டு எண்-9-க்குட்பட்ட அண்ணா வீதி பகுதியில் மறு தார்தளம் அமைத்தல், வார்டு எண்-9-க்குட்பட்ட நேரு வீதியில்மறுதார்தளம் அமைத்தல்,வார்டு எண்-9-க்குட்பட்ட காமாட்சியம்மன் கோவில் வீதியில் மறுதார்தளம் அமைத்தல்,வார்டு எண்-10-க்குட்பட்ட அண்ணாகாலனி 1வது வீதியில் மறு தார்தளம் அமைத்தல். வார்டுஎண்-10-க்குட்பட்ட அண்ணா காலனி 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல். வார்டு எண்-10-க்குட்பட்டஅண்ணாகாலனி 1வது குறுக்கு வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்-10-க்குட்பட்ட அண்ணா காலனி 3-வது குறுக்கு வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்- 10-க்குட்பட்ட பத்மாவதிபுரம் ( பள்ளி முன்புறம் வடக்கு தெற்கு) 7வது வீதியில் மறு தார்தளம் அமைத்தல், வார்டு எண்-11-க்குட்பட்ட இ.பி.காலனி 1வது வீதியில் மறு தார்தளம் அமைத்தல், வார்டு எண்-11க்குட்பட்ட இ.பி.காலனி 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்-11-க்குட்பட்ட இ.பி.காலனி குறுக்கு வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்-11-க்குட்பட்டஅன்னை கார்டன் 1வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல்,வார்டு எண்-11-க்குட்பட்ட அன்னை கார்டன் 3வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டுஎண்-14-க்குட்பட்ட பெருமாள் கோவில் வீதி பகுதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் தார்தளம் அமைத்தல் வார்டு எண்- 14-க்குட்பட்ட எஸ்.பி.நகர் 5-வது வீதி பகுதியில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்-14-க்குட்பட்ட இரங்கநாதபுரம் பள்ளி சாலை பகுதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் தார்தளம் அமைத்தல், வார்டு எண்-15 க்குட்பட்ட வள்ளுவர் வீதி பகுதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் புதிய தார்தளம் அமைத்தல், | 5.455 | 491.75 |
| 3 | 3 | வார்டு எண்-18-க்குட்பட்ட நெருப்பெரிச்சல் முதல் ஆர்.ஜீ. புதூர் வரை உள்ள சாலையில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்-19-க்குட்பட்ட எஸ்.டி. கம்பெனி சாலையில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்-20-க்குட்பட்ட நஞ்சப்பா நகர் பிரதான சாலை முதல் ஜே.வி.நிட்டிங் வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-21-க்குட்பட்ட ரோஜா நகர் 2வது வீதி மற்றும் ரோஜா நகர் குறுக்கு வீதி, ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-22-க்குட்பட்ட வஉசி நகர் 1வது, 3வது, மற்றும் 4வது வீதி பகுதிகளில் | 5,015 | 475.20 |

| வரிசை எண். | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | | தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-24-க்குட்பட்ட கொங்கு நகர் 1வது வீதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-33-க்குட்பட்ட கேட்டுத் தோட்டம் முதல் பொம்மையன் கோவில் வரை தார்தளம்அமைத்தல், வார்டுஎண்-33-க்குட்பட்ட சொட்டான் கலர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் வார்டு எண்-33-க்குட்பட்ட பொன்னுசாமி நகர் 2வது குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் அமைத்தல் | | |
| 4 | 4 | வார்டு எண்-24-க்குட்பட்ட முத்துநகர் 2வது குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்- 25-க்குட்பட்ட ராமமூர்த்தி நகர் 1வது வீதி, ராமமூர்த்தி நகர் மேற்கு மற்றும் ராமமூர்த்தி நகர் கிழக்கு ஆகிய பகுதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-25–க்குட்பட்ட தேவாங்கபுரம் பிரதான சாலை மற்றும் ஹார்வி சாலை பகுதியில் தார்தளம் புதுப்பித்தல்,வார்டு எண்-26-க்குட்பட்ட MGR நகர் 5வது வீதி மற்றும் SV காலனி 2வது வீதி ஆகிய பகுதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-26-க்குட்பட்ட SV காலனி விரிவு 9வது வீதி, SV காலனி 3வது மற்றும் 4வது வீதி ஆகிய பகுதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-27-க்குட்பட்ட ஜவகர் நகர் 5வது வீதி மற்றும் திருநீலகண்டபுரம் வடக்கு பிரதான வீதி பகுதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-27-க்குட்பட்ட MS நகர் பள்ளி வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-28-க்குட்பட்ட பாரதி நகர் 4வது மற்றும் தெற்கு குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் புதிய தார்தளம் அமைத்தல், வார்டு எண்-28-க்குட்பட்ட பாரதி நகர் வடக்கு வீதியில் புதிய தார்தளம் அமைத்தல், வார்டு எண்-28-க்குட்பட்ட சின்னபொம்மநாயக்கன்பாளையம் வடக்கு வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் பேவர் பிளாக் அமைத்தல்,வார்டு எண்-29-க்குட்பட்ட தலிஞ்சி காடு பிரதான சாலை, 3வது, 4வது வீதிகள் மற்றும் லக்கி நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் புதிய தார்தளம் அமைத்தல், வார்டு எண்-30-க்குட்பட்ட ஆர்.கே.நகர் பிரதான சாலை (ஆசிரியர் காலனி) ஆர்.கே. நகர் 1வது, 2வது, 3வது, 4வது & 5வது வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் புதிய தார்தளம் புதுப்பித்தல் | 5.119 | 457.80 |
| 5 | 5 | வார்டு எண்-31- வி-கே-ஆர். தோட்டம் பகுதியில் தார்தளம் மேம்படுத்துதல்,வார்டு எண்-31-வி-கே-ஆர். தோட்டம் 1வது வீதியில் மழைநீர் வடிகால் அமைத்து தார்தளம் அமைத்தல், வார்டு எண்- 31-ல் போலீஸ் லைன் 2வது வீதியில் மழைநீர் வடிகால் அமைத்து தார்தளம் மேம்படுத்துதல்,வார்டு எண்-41-ல் செரங்காடு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைத்து தார்தளம் மேம்படுத்துதல், வார்டு எண்-42 நேரு நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்- 42-க்கு தில்லை நகர் பகுதியில் தார்தளம் மேம்படுத்துதல்,வார்டு எண்-42-ல்கரட்டாங்காடு 4வது, 6வது மற்றும் 4வது குறுக்கு வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-43-ல் பெரிய தோட்டம் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் வார்டு எண்- | 5.105 | 479.00 |

| வரிசை எண். | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | | 44-ல் ரேணுகா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைத்து தார்தளம் அமைத்தல், வார்டு எண்-45- டிமாண்ட் வீதி, செல்லப்பபுரம் பள்ளி வீதி மற்றும் கே.என்.பி. காலனி 3வது வீதி பகுதியில் தார்தளம் புதுப்பித்தல்,வார்டு எண்- 45- ஆண்டிக்காடு பகுதியில் தார்தளம் புதுப்பித்தல்,வார்டு எண்-56, பாரப்பாளையம் மங்கலம் ரோடு சந்திப்பு முதல் ராயபுரம் நொய்யல் பாலம் இணைப்பு சாலை வரை தார்தளம் புதுப்பித்தல். | | |
| 6 | 6 | வார்டு எண்-32க்குட்பட்ட மணியாரம்பாளையம் பாலம் முதல் கருமாரம்பாளையம் சந்திப்பு மற்றும் மண்ணரை சந்திப்பு வரை தார்தளம் அமைத்தல்,வார்டுஎண்-32-க்குட்பட்ட சின்ன குழந்தையப்பா நகர் பிரதான சாலை மற்றும் 2வது குறுக்கு வீதியில் தார்தளம் அமைத்தல்,வார்டு எண்-38-க்குட்பட்ட நல்லிகவுண்ட நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல்,வார்டு எண்- 39-க்குட்பட்ட ஆர்.வி.ஈ.நகர் 7வது மற்றும் 8வது வீதியில் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டுதல் மற்றும்தார்தளம் புதுப்பித்தல்,வார்டு எண்-40-க்குட்பட்ட பாண்டுரங்கன் காலனி பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-40- க்குட்பட்ட அமர்ஜோதி கார்டன் பிரதான சாலை மற்றும் என்.பி.நகர் பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல்,வார்டு எண்.40-க்குட்பட்ட பத்மினி கார்டன் மேற்கு 1வது வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்-56- கே.வி.ஆர்.நகர் மெயின்ரோடு, கே.வி.ஆர்.நகர் மேற்கு 2வது வீதி மற்றும் கே.வி.ஆர் நகர் காலனி மெயின்ரோடு பகுதியில் தார்தளம் புதுப்பித்தல். | 6,291 | 477.00 |
| 7 | 7 | வார்டு எண்-12-க்குட்பட்ட பாலமுருகன் நகர் விரிவு மற்றும் மஹாசக்தி நகர் பகுதியில் புதியதாக தார்தளம் அமைத்தல்,வார்டு எண்-12க்குட்பட்ட வி.பி.சித்தன் நகர் பிரதானசாலை,வி.பி.சித்தன் நகர்4வது வீதி, பாலமுருகன் நகர் பிரதான சாலை மற்றும் பாலமுருகன் நகர் விரிவு மறு தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-13-க்குட்பட்ட ஸ்ரீவித்யா நகர் 3வது வீதி, தணிகை நகர், தணிகை நகர் 2வது வீதி, காமாட்சிபுரம் கிழக்கு 1-வது வீதி, காமாட்சிபுரம் கிழக்கு 1வது வீதி, குறுக்கு வீதி, காமாட்சிபுரம் கிழக்கு 2-வது வீதி, காமாட்சிபுரம் கிழக்கு 3வது வீதி, பகவதி அம்மன் நகர் 1வது வீதி, சாரதா நகர் பிரதான சாலை, சாரதா நகர் 1வது வீதி, சாரதா நகர் குறுக்கு வீதி, காமாட்சிபுரம் மேற்கு பிரதான சாலை, சாரதா நகர் 1வது வீதி பகுதியில் மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் புதிய தார்தளம் அமைத்தல்,வார்டு எண்-46-ல் ராயபுரம் கிழக்கு மேற்கு வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல்,வார்டு எண்-46-ல் சித்தப்பா கார்டன் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் வார்டு எண்-47-ல் ஸ்டேனிஸ் 4வது வீதியில் மழைநீர் வடிகால் கட்டி தார்தளம் புதுப்பித்தல்,வார்டு எண்- 47-ல் ஸ்டேனிஸ் 5வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல்,வார்டு எண்-47-ல் பங்களா மெயின் வீதியில் மழைநீர் வடிகால் கட்டி தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-47-ல் இந்திரா நகர் 3வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்- 47-ல் திருவள்ளுவர் நகர் வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | 6,122 | 479.85 |

| வரிசை எண். | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | | வார்டு எண்-47-ல் முத்துச்சாமி 2வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல் வார்டு எண்-48-ல் பூங்கா ரோட்டில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்- 48-ல் சூசையாபுரம் 2வது வீதியில் மழைநீர் வடிகால் அமைத்து தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்- 48-ல் குமரன் ரோடு நேரு வீதி சந்திப்பு முதல் தலைமை தபால் நிலையம் வரை தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-49-ல் எருக்காடு 1வது, 2வது, 3வது மற்றும் 4வது வீதியில் மழைநீர் வடிகால் அமைத்து எருக்காடு 3வது மற்றும் 4வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-49ல் பூச்சக்காடு 2வது வீதி மற்றும் பூச்சக்காடு 1வது, 2வது, 3வது மற்றும் 4வது குறுக்கு வீதியில் தார்தளம் அமைத்தல். | | |
| 8 | 8 | வார்டு எண்-36-க்குட்பட்ட கார்த்திக் நகர் பிரதான சாலை மற்றும் 1 முதல் 6 வீதிகளில் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-36-க்குட்பட்ட பொன்கோவில் நகர் பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-37-க்குட்பட்ட பேங்கர்ஸ் காலனி பகுதியில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்- 52-ல் பூங்கா நகர் 3வது வீதியில் புதிய தார்தளம் அமைத்தல், வார்டு எண்- 52-ல் சபாரி நகர் மெயின்ரோட்டில் தார்தளம் அமைத்தல்,வார்டு எண்- 53-ல் ஜே.ஜே.நகர் மற்றும் ஜே.ஜே.நகர் 3வது வீதி பகுதிகளில் தார்தளம் சீரமைத்தல்,வார்டு எண்-53-ல் வீரபாண்டி பேருந்து நிலையம் முதல் சௌடேஸ்வரி நகர் வரை தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்- 54-ல் கெம்பே நகர் மற்றும் அம்பேத்கார் நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-54-ல் தாய் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைத்து ஏ.பி.நகர் முதல் செல்வி நகர் மற்றும் தாய் நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 5.102 | 339.50 |
| 9 | 9 | வார்டு எண்-55-ல் செல்வலட்சுமி நகர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்- 57-ல் பிரபு நகர் மற்றும் சூரியா கிருஷ்ணா நகர் குறுக்கு வீதியில் மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைத்து தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்- 58-ல் ஆர்.கே.காட்டன் ரோடு முதல் ஆண்டிபாளையம் மெயின்ரோடு ஆர்.கே.காட்டன் மில் வரை புதிய சிறுபாலம் அமைத்து சாலையை அகலப்படுத்தி தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்-59-ல் திருமலை நகர் வீதிகளில் புதிய தார்தளம் அமைத்தல், வார்டு எண்-60-ல் ஹரே ராமா ஹரே கிருஷ்ணா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைத்து மற்றும் புதிய தார்சாலை புதுப்பித்தல் | 4.592 | 300,50 |
| | | **மொத்தம்** | | **4000.00** |

மேற்கண்ட 9சிப்பங்களுக்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| மாநகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்ய நிதி | மாநில நிதிக்குழு மத்திய நிதிக்குழு, மானிய நிதி, நில அபிவிருத்திக் கட்டணம் | மாநகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| திருப்பூர் மாநகராட்சி | ரூ.40.00 கோடி | ரூ.12.00 கோடி (30%) | ரூ.20.00 கோடி (50%) | ரூ.8.00 கோடி (20%) |

**701-ன் தொடர்ச்சி**

திருப்பூர் மாநகராட்சியில் TURIP 2019-20 -க்கான திட்டத்தின் கீழ் சாலை சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.40.00 கோடியில் மேற்காண் பட்டியலில் உள்ள நிதி ஒதுக்கீட்டின் படி இம்மாநகராட்சி பகுதிகளில் சாலை சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கும் மற்றும் நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

2019-20ம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட அனுமதி 18-07-2019ம் தேதியில் நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கியுள்ளதால் மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 4031 / 2018)

- - - - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**-----**

**702)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம்-1,15-வேலம்பாளையம் வார்டு எண்.14-க்குட்பட்ட இரங்கநாதபுரம் நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்கள் இரண்டு வகுப்பறைக் கட்டிடம் பழுதடைந்து பள்ளி மாணவியர்களின் மேல் இடிந்துவிழும் நிலையில் உள்ளது எனவும், எனவே புதிதாக வகுப்பறை கட்டிடம் அமைத்து தருமாறு ஆணையாளர் அவர்களுக்கு கடிதம் கொடுத்துள்ளார். அப்பள்ளி நேராய்வு செய்யப்பட்டதில் ஏற்கனவே மேற்குப் பகுதியில் உள்ள வடக்குப் பார்த்து அமைந்துள்ள வகுப்பறை கட்டிடம் மிகவும் பழுதடைந்து பள்ளி மாணவ மாணவியர்களின் மேல் கூரை இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேலும் இப்பள்ளியில் 500-க்கும் மேற்பட்ட பள்ளி பள்ளி மாணவ மாணவியர் படித்து வருகின்றனர். வகுப்பறை கட்டிடம் பழுதடைந்துள்ளதால் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்கள் பள்ளி வளாகத்தின் மரத்தடியில் அமர்ந்து பயில்கின்றனர். மேற்கண்ட பள்ளி தற்பொழுது தமிழ்வழி கல்வியில் பயில 8ம் வகுப்பு வரையில் உள்ளது. எனவே இப்பள்ளி கட்டிடம் இடிந்து பள்ளி மாணவ மாணவியர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணமும் பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களின் கோரிக்கையின் பேரிலும் இரண்டு வகுப்பறை கட்டிடம் கட்ட உத்தேச மதிப்பீடு ரூ.24.95 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அனுமதி வழங்கலாம்.

------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**-----**

**703)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-2க்குட்பட்ட வார்டு எண்-18 தோட்டத்துப்பாளைம் பகுதியில் 5 TPD கொள்திறன் கொண்ட நுண்உரக்கிடங்கு ( MCC) அமைத்தல் பணிக்கு 11-02-2019 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் பணி துவங்கும் பொழுது, அருகில் கோவில் உள்ளதால், மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் பேரில் அந்தப் பணியினை அந்தப் பகுதியில் செய்யாமல் மண்டலம் எண்-2க்குட்பட்ட வார்டு எண்-19ல் உள்ள பூலுவப்பட்டி பகுதியில் நெருப்பெரிச்சல் கிராமம் புலஎண்.159(பா)2,3-ல் மாற்றி பணியினை செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

**703-ன் தொடர்ச்சி**

**அலுவலகக் குறிப்பு** :

இந்தப் பணி திட்டப் பணியாக உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி இடத்தினை மாற்றி பணியினை செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண். 149 / N / 2018-19)

.........

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

-----

**704)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN 42 S 0393 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 27-09-2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன, அதன்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|
| 1. | திருவாளர் Vambsk Fabs<br>வேலாண்டிபாளையம், கோயம்புத்தூர் | ரூ. 83,900/- |
| 2. | திருவாளர் சக்தி பாடி ஒர்க்ஸ், பூந்தமல்லி, சென்னை-56 | ரூ. 84.400/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய வ.எண் 1ல் கண்ட திருவாளர். Vambsk Fabs வேலாண்டிபாளையம், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். Vambsk Fabs வேலாண்டிபாளையம், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( H.1 / 0196 /2019 / ம.1)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-----

**705)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப் பிரிவு 8 எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு புதிய டயர் மற்றும் டியூப் மாற்றும் பணி மேற்கொள்ள 27-09-2019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விபரம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1. | S.M.S. Tyres<br>PN Road, Tiruppur | 8 No's வாகனங்களுக்கு புதியதாக டயர் மற்றும் டியூப் மாற்றம் செய்யும் பணி | ரூ. 7,17,600/- |
| 2. | Friends Tyres<br>Avinashi Road,Tiruppur | | ரூ. 7,10,500/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திருவாளர் Friends Tyres, Avinashi Road,Tiruppur என்ற

நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**705-ன் தொடர்ச்சி**

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். Friends Tyres,Avinashi Road,Tiruppur என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( H.1 / 3240 /2019 / ம.1)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-----

**706)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப் பிரிவு 13 எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு புதிய டயர் மற்றும் டியூப் மாற்றும் பணி மேற்கொள்ள 27-09-2019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விபரம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1. | S.M.S. Tyres<br>PN Road, Tiruppur | 13 No's வாகனங்களுக்கு புதியதாக டயர் மற்றும் டியூப் மாற்றம் செய்யும் பணி | ரூ. 5,54,100/- |
| 2. | Friends Tyres<br>Avinashi Road,Tiruppur | | ரூ. 5,44,900/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திருவாளர் Friends Tyres, Avinashi Road,Tiruppur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். Friends Tyres,Avinashi Road,Tiruppur என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( H.1 / 3240 /2019 / ம.1)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-----

**707)** திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட நெருப்பெரிச்சல் கிராம பகுதியில் (திருகுமரன் நகர்) அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் 1248 வாடகை குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மொத்த அளவு முறையில் வழங்க கோரி விண்ணப்பித்துள்ளார். நெருப்பெரிச்சல் பகுதியில் உள்ள நிலமட்டத் தொட்டியில் இருந்து திருகுமரன் நகர் பகுதியில் கட்டப்பட்டு வரும் வாடகை குடியிருப்பு வளாகம் வரை குடிநீர் விநியோக குழாய் பதித்து அளவுமானி மற்றும் திருகு அடைப்பான் பொருத்தி நாள் ஒன்றுக்கு 400000 லிட்டர் (1248 x 300 = 374400 Say = 400000 லிட்டர்) அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீரினை வழங்க வேண்டியுள்ளது. தற்பொழுது வீரபாண்டி பகுதியில் 1.00இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலமட்டத் தொட்டி மூலம் 18 மற்றும் 19வது வார்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி திருகுமரன் நகர் பகுதியில் கட்டப்பட்டு வரும் வாடகை குடியிருப்புகளுக்கு ஏற்கனவே உள்ள நிலமட்டத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம்

செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி நெருப்பெரிச்சல் பகுதியில் புதிதாக 1.10இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலமட்டத் தொட்டி மற்றும் 20HP மோட்டார் மற்றும் 150mm, 119mm DI குழாய் அமைக்க ரூ.58.50 இலட்சம் மதிப்பீடு

**707-ன் தொடர்ச்சி**

தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த பணிக்கான தொகையினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம், 118, சக்தி நகர் 3வது வீதி, போயம்பாளையம் பிரிவு, திருப்பூர் அவர்கள் மேற்கண்ட மதிப்பீட்டிற்கான தொகை ரூ.58.50 இலட்சத்திற்கான காசோலையை 21-09-2019 அன்று அவர்களிடமிருந்து பெறப்பட்டு மாநகராட்சி வைப்புத் தொகையில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

( ந.க.எண். இ.1/ 501 / 2019 / ம.2)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-----

**708)** திருப்பூர் மாநகராட்சியில் அபிவிருத்தித் திட்டத்தின் நிர்வாக அனுமதி பெற்ற 41 பணிகளை ஒருங்கிணைத்து 13 சிப்பங்களாக தொகுத்து வழங்க சம்மந்தப்பட்ட இளநிலை / உதவி பொறியாளருக்கு இவ்வலுவலக குறிப்பாணை எண்.இ.1 / 5195 / 2019 நாள் 19-09-2019-ல் குறிப்பாணை வழங்கப்பட்டது. அதன்படி 41 எண்ணிக்கை மதிப்பீடுகள் 13 சிப்பங்களாக தொகுக்கப்பட்டு மதிப்பீடுகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2, 5, 8 | வார்டு எண்.2, நல்லாறு ஓடையின் குறுக்கே உயர்மட்ட சிறுபாலம் அமைத்தல், வார்டு எண்.5, ஆத்துப்பாளையம் பெஸ்ட் சாலை பின்பகுதியில் மறுதார்தளம் அமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல், மற்றும் வார்டு எண்.8 விக்னேஷ்வரா நகர் தெற்கு பிரதான வீதி, பிச்சம்பாளைம் 5வது வீதியில் மறு தார்தளம் அமைத்தல். | 97.00 |
| 2. | 4,7 | வார்டு எண்.4, வெங்கமேடு தண்ணீர் தொட்டி வீதியில் மறு தார்தளம் அமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.7, செல்வலட்சுமி நகர் மற்றும் மாரியம்மன் கோவில் வீதி பகுதிகளில் புதிதாக தார்தளம் அமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 95.00 |
| 3. | 8,10,24 | வார்டு எண்.8, சாஸ்திரி நகர் 2வது வீதி, 3வது வீதியில் மறுதார் தளம் அமைத்தல், வார்டு எண்.8, சாஸ்திரி நகர் 1வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண். 8,பிச்சம்பாளையம் விரிவு 4வது வீதி மற்றும் மாகாளியம்மன் கோவில் வீதி ஆகிய வீதிகளில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.10, வ.ஊ.சி. நகர் 1வது வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல், வார்டு எண்.24, T.S.R. லே-அவுட் 6வது | 99.00 |

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | | பிரதான வீதியில் மறு தார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.24, S.V. காலனி விரிவு மற்றும் கிழக்கு 6வது வீதிகளில் மறு தார்தளம் அமைத்தல். | |
| 4. | 19,27 | வார்டு எண்.19, விக்னேஷ்வரா நகர் 1வது பிரதான சாலை, தெற்கு 1வது,2வது,3வது,4வது குறுக்கு வீதிகள், வடக்கு 1வது, 2வது குறுக்கு வீதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல், வார்டு எண்.27, ரங்கநாதபுரம் 2வது வீதியில் மறுதார் தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.27, ரங்கநாதபுரம் 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல். | 99.45 |
| 5. | 30,27,24 | வார்டு எண்.30, கங்கா நகர் ( வெங்கமேடு சாலை) பகுதியில் ஆர்.சி.சி. மழைநீர் வடிகால் மற்றும் குழாய் அமைத்தல், வார்டு எண்.27, சந்திரா காலனி 5-வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.24, T.S.R. லே-அவுட் 6வது வீதி மற்றும் 6வது குறுக்கு வீதியில் மறு தார்தளம் அமைத்தல். | 98.50 |
| 6. | 31,32 | வார்டு எண்.31, யுனிவர்சல் தியேட்டர் சாலை பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் மற்றும் சிறுபாலம் அமைத்தல், வார்டு எண்.31, 12 ஆர்.திருமண மண்டப வீதியில் தார்தளம் புதுப்பித்தல் மற்றும் வார்டு எண்.32, AITUC காலனி பகுதியில் தார்தளம் புதுப்பித்தல். | 91.00 |
| 7. | 44,35 | வார்டு எண்.44, பெரிய கடை வீதி பகுதியில் மறு தார்தளம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் வார்டு எண்.35, யாசின் பாபு நகர் பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல். | 99.00 |
| 8. | 49,56 | வார்டு எண்.49, பாளையக்காடு 1வது மற்றும் 2வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.56, வெங்கடாசலபுரம் 1வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல் மற்றும் வார்டு எண்.56, KTC பள்ளி பிரதான சாலையில் ( கே,.வி.ஆ. நகர் பிரதான சாலை முதல் ஐஸ் கடை வீதி சந்திப்பு வரை ) தார்தளம் புதுப்பித்தல். | 98.00 |
| 9. | 35,39 | வார்டு எண்.35, விஜயாபுரம் பிரதான சாலையில் ( பள்ளி சந்திப்பு முதல் தென்றல் நகர் 3வது வழி சந்திப்பு வரை) தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.39, பொன்நகர் 1வது வீதி, 2வது வீதி, 3வது வீதி மற்றும் தெற்கு வடக்கு குறுக்கு வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல். | 93.90 |
| 10. | 38 | வார்டு எண்.38, பள்ளக்காட்டுப்புதூர் பிரதான சாலை மற்றும் குறுக்கு வீதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.38, ஜே.எஸ். கார்டன் பிரதான சாலை, 1வது வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல் மற்றும் வார்டு எண். 38, ஜே.எஸ். கார்டன் 2வது வீதி, 3வது வீதி, 4வது வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல். | 92.05 |
| 11. | 40, 41,45 | வார்டு எண்.40, ஏ.எஸ். நகர் 7வது வீதி மற்றும் 8வது வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல, வார்டு எண்.41, செரங்காடு 2வது வீதி, 5-வது வீதி மற்றும் குறுக்கு வீதி ( பூமா மில் சாலை) பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் மற்றும் வார்டு எண். 45, சின்னதோட்டம் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல். | 96.10 |
| 12. | 53, 54,57 | வார்டு எண்.53, அமராவதி நகர் விவு 1வது வீதி முதல் கல்லாங்காடு பிரதான சாலை சந்திப்பு வரை தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.54, குப்பாண்டம்பாளையம் ஏ.டி.காலனி பிரதான சாலை மற்றும் குறுக்கு வீதிகளில் | 95.00 |

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | | தார்தளம் புதுப்பித்தல் மற்றும் வார்டு எண்.57, முருகம்பாளையம் பிரதான சாலையில் ஏ.டி.காலனி சந்திப்பு முதல் காது கேளாதோர் பள்ளி வரை மழைநீர் வடிகால் அமைத்தல் | |
| 13. | 36, 52, 59,60 | வார்டு எண்.36, முத்தனம்பாளையம் வடக்கு பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல் மற்றும் முத்தனம்பாளையம் வடக்கு 1வது, 2வது குறுக்கு வீதிகளில் புதிதாக தார்தளம் அமைத்தல், வார்டு எண்.36, கிழக்கு பிரதான சாலை மற்றும் குறுக்கு வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் சிமெண்ட் கான்கீரீட் சாலை அமைத்தல், வாடு எண்.52, வாஞ்சி நகர் பிரதான சாலையில் புதிதாக தார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண். 60, பாரதி நகர் ஏ.டி.காலனி பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 97.00 |
| | | **மொத்தம்** | **1251.00** |

மேற்படி சிப்பங்களாக தொகுக்கப்பட்ட 13 பணிகளுக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்ட மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**-----**

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.